விலை ரூபா: 10.00

*Registered as a Newspaper in Srilanka*

# வலம்புரி

*Valampurii*

பக்கங்கள்: எட்டு

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2038 ஆனி 15 வெள்ளிக்கிழமை (29.06.2007) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 192

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
ராம்கோ சீமெந்து



## நயினையில் இன்று தேர்

நயினை நாகபூசணி அம்மனின் தேர்த் திருவிழா இன்று நடைபெறுகின்றது. இன்று காலை வசந்த மண்டபப் பூஜை இடம்பெற்றுக் காலை 10 மணிக்கு தேரில் அம்மன் ஆரோகணிப்பார். நாளை தீர்த்தத் திருவிழா இடம்பெறும்.

## சி.டி.எம்.ஏ.இணைப்புப் பெறுவதற்கான நடைமுறைகள் அரச அதிபரால் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் சி.டி.எம்.ஏ. தொலைபேசி வழங்கல் தொடர்பான கலந்துரையாடல் நேற்றுக் காலை 9.30 மணிக்கு யாழ். அரச அதிபர் க.கணேஷ் தலைமையில் யாழ்.செயலகத்தில் நடைபெற்றது.

இக் கலந்துரையாடலில் சி.டி.எம்.ஏ. தொலைபேசி இணைப்பு வழங்குதல் தொடர்பாக பின்வரும் தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

❖ தற்போது தொலைபேசி வசதிகள் இல்லாத பிரதேசங்களில் உள்ள அரச திணைக்களங்கள், வங்கிகள், ஏனைய அரச நிறுவனங்கள், கூட்டுறவுச் சங்கங்கள் என்பவற்றிற்கு (08 ஆம் பக்கம் பார்க்க)

# புரிந்துணர்வு ஒப்பந்தத்தை அமுல்படுத்தி அரசியல் தீர்வு ஏற்படுத்தப்பட வேண்டும்



## அமெ.உதவி இராஜாங்கச் செயலாளர் றிச்சட் பௌச்சர் வலியுறுத்தல்

(கொழும்பு)

இலங்கையில் அரசியல் தீர்வு ஒன்று ஏற்படுத்தப்பட வேண்டும். இதற்காக அரசாங்கமும் விடுதலைப்புலிகளும் யுத்தநிறுத்த உடன்படிக்கையை கடைப்பிடித்துப் பேச்சுவார்த்தைக்குத் திரும்ப வேண்டும் என அமெரிக்கா வலியுறுத்தியுள்ளது.

நோர்வே பத்திரிகை ஒன்றுக்குச் செவ்வியளித்த அமெரிக்காவின் தெற்கு மற்றும் மத்திய ஆசியாவுக்கான உதவி இராஜாங்கச் செயலர் றிச்சட் பௌச்சர் இவ்வாறு கூறியுள்ளார். (08 ஆம் பக்கம் பார்க்க)

## இணைத்தலைமை நாடுகளின் மாநாடு இலங்கை அமைதி முயற்சிகளுக்கு உதவும்

### வெளிவிவகார அமைச்சர் நம்பிக்கை

(டோக்கியோ)

நோர்வேத் தலைநகர் ஒஸ்லோவில் நடைபெற்ற இணைத் தலைமைநாடுகளின் மாநாடு அமைதி முயற்சிக்கு உதவும் என்று நம்புவதாக இலங்கை வெளிவிவகார அமைச்சர் றோகித போகொல்லாகம தெரிவித்துள்ளார்.

யப்பானின் டோக்கியோவில் நேற்று றோகித போகொல்லாகம இதனைத் தெரிவித்துள்ளார். இணைத் தலைமை நாடுகளின் மாநாடு ஒரு சாதகமான சூழலை ஏற்படுத்தும் என்று (08 ஆம் பக்கம் பார்க்க)

## கடந்த 5 மாதங்களில் 430 பேர் படுகொலை

(கொழும்பு)

இலங்கையில் கடந்த 5 மாதங்களில் 430 பேர் படுகொலை செய்யப்பட்டுள்ளனர் என்று காணாமல் போதல் தொடர்பான ஜனாதிபதி ஆணையகத்தின் அறிக்கை தெரிவித்துள்ளது.

செப்ரெம்பர் 2006 முதல் பெப்ரவரி 2007 வரையிலான சம்பவங்கள் குறித்து அந்த ஆணையம் அறிக்கை வெளியிட்டுள்ளது. இது தொடர்பாக ஆணையகத்தின் தலைவர் மகாநாம திலகரத்ன கூறியதாவது,

படுகொலை செய்யப்பட்டோரில் பெரும்பான்மையோர்– சிறுபான்மைத் தமிழர்கள். கடத்தல்கள், (08 ஆம் பக்கம் பார்க்க)

## நடைபாதை வியாபாரி யாழ்.நகரில் சுட்டுக்கொலை

(யாழ்ப்பாணம்)

## புதிய கூட்டு அரசாங்கம் குறித்து

## நடைபாதை வியாபாரி யாழ்.நகரில் சுட்டுக்கொலை

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகர் மத்தியில் பேருந்து நிலையத்திற்கு முன்பாக நேற்று மாலை 4.30 மணியளவில் நடைபாதை வியாபாரி ஒருவர் இனந்தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

சம்பவத்தில் அல்லைப்பிட்டியைச் சேர்ந்த நல்லூர் செட்டித் (08 ஆம் பக்கம் பார்க்க)


## வலந்தலைக் கடலில் சடலம் கரையொதுங்கியது

(யாழ்ப்பாணம்)

காரைநகர் வலந்தலைக் கடற்கரையில் சடலமொன்று கரையொதுங்கியது. நேற்றுக் கரை ஒதுங்கிய சடலம் ஆணினுடையது எனத் தெரிவிக்கப்பட்டது.

முகம் சிதைவடைந்த நிலையில் காணப்படும் அச் சடலத்தில் மஞ்சள் நிறச் சேட்டும் பூப்போட்ட (08 ஆம் பக்கம் பார்க்க)

# புதிய கூட்டு அரசாங்கம் குறித்து ரணில்-மங்கள மந்திராலோசனை



(கொழும்பு)

மகிந்த அரசாங்கத்தைக் கவிழ்த்துவிட்டு புதிய கூட்டு அரசாங்கத்தை அமைப்பது குறித்து ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் அதிருப்திக் குழுவான சுதந்திரக் கட்சியின் மக்கள் பிரிவு அமைப்பாளர் மங்கள சமரவீரவும் நேற்று மந்திராலோசனை நடத்தினர்.

ரணிலின் அலுவலகத்தில் சுமார் ஒரு மணிநேரம் நடந்த இச் சந்திப்பில் ஐக்கிய தேசியக் கட்சியின் தரப்பில் திஸ்ஸ அத்தநாயக்க, கருணாநாயக்க, ருக்மன் சேனநாயக்க மற்றும் ஜோசப் மைக்கல் பெரேரா ஆகியோரும்,

மங்கள சமரவீர தரப்பில் சிறிபதி சூரியாராச்சி மற்றும் ரிரான் (08 ஆம் பக்கம் பார்க்க)

## மாவிலாற்றில் 11 விடுதலைப்புலிகள் பலி பாதுகாப்புக்கான ஊடக மையம் செய்தி

(கொழும்பு)

திருகோணமலை மாவட்டத்திலுள்ள மாவிலாறு மேற்குப் பிரதேசத்தில் நேற்றுக் காலை விடுதலைப்புலிகள் மீது படையினர் மேற்கொண்ட பதில் தாக்குதலில் 11 புலிகள் கொல்லப்பட்டதாக தேசிய பாதுகாப்புக்கான ஊடக மையம் தெரிவித்துள்ளது.

மாவிலாறு பிரதேசத்தில் மறைந்திருந்த போது படையினரால் சுற்றிவளைக்கப்பட்டதையடுத்தே இம் மோதல் ஏற்பட்டுள்ளதாக ஊடக மையம் தெரிவித்துள்ளது.

பதில் தாக்குதலையடுத்து ரி-56 ரகத் துப்பாக்கிகள், 3 கைக்குண்டுகள் மற்றும் ஒரு தொடர்பாடல் (08 ஆம் பக்கம் பார்க்க)

## நாவாந்துறையில் கிளைமோர்த் தாக்குதல் அதிகாரி உட்பட இரு இராணுவத்தினர் பலி

(யாழ்ப்பாணம்)

நாவாந்துறையில் நேற்றுக் காலை 9 மணியளவில் மேற்கொள்ளப்பட்ட கிளைமோர்த் தாக்குதலில் அதிகாரி உட்பட இரு இராணுவத்தினர் பலியாகினர்.

மோட்டார் சைக்கிளில் ரோந்துப் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த இராணுவத்தினரை இலக்கு வைத்தே இத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தேசிய பாதுகாப்புக்கான ஊடக மத்திய நிலையம் தெரிவித்தது.

காக்கைதீவுப் பகுதியிலிருந்து நாவாந்துறை நோக்கிச் சென்று கொண்டிருந்த போதே இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இக் கிளைமோர்த் (08 ஆம் பக்கம் பார்க்க)

## நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# இனப்பிரச்சினை தொடர்பான தகவலை தவறாக இந்தியாவுக்கு வழங்க முயற்சி

## மகிந்தவை குற்றஞ்சாட்டுகிறார் மங்கள

(கொழும்பு)

இனப்பிரச்சினை தொடர்பாக இந்தியாவுக்கு தவறாக புரிதலை ஏற்படுத்த மகிந்த ராஜபக்ஷ முயற்சிக்கிறார் என்று சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் மக்கள் பிரிவின் தலைவர் மங்கள சமரவீர குற்றம் சாட்டியுள்ளார்.

இந்திய நாளேடான இந்துஸ்தான் ரைம்ஸுக்கு மங்கள சமரவீர அளித்த நேர்காணலில் இதனைத் தெரிவித்தார். எஸ். டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்க-ஜவஹர்லால் நேரு காலத்திலிருந்து இந்தியா-இலங்கை உறவானது வலுவானதாக இருந்தது.

கடந்த 2005 ஆம் ஆண்டு அப்போதைய வெளிவிவகார அமைச்சராக இருந்த லக்ஷ்மன் கதிர்காமர் இந்தியா -இலங்கை உறவானது உயர் நிலையில் இருப்பதாகக் கூறினார். ஆனால் தற்போதைய ராஜபக்ஷ அரசாங்கமானது நான்கு மாதங்களில் அந்த உறவை சீர்குலைத்தது.

வெளிவிவகார அமைச்சராக இருந்தேன் என்கிற வகையில் இந்தியாவுக்கு தவறாக புரிதலை ஏற்படுத்த மகிந்த முயற்சித்தார். இந்தியாவுடனான உறவை இலங்கையர்கள் கண்டிப்பாக பேணவேண்டும். ஆயிரக்கணக்கான தமிழ் அகதிகள் இந்தியாவுக்குச் செல்லும் நிலையில் இந்தியா தொடர்ந்தும் அமைதியாக இருக்கும் என்று எதிர்பார்க்க முடியாது.

தமிழர் பிரச்சினை தொடர்பாக இந்தியா தலையிடுவதற்கு நியாயமான காரணம் உள்ளது. புரிதலும் ஒத்துழைப்பும் இரு நாடுகளிடையே சம அளவில் இருக்க வேண்டும். தெற்காசிய பிராந்தியத்தில் பொருளாதார வளர்ச்சிநிலை அடைய முன்னை விட இந்தியாவுடனான உறவு வலுப்படுத்தப்படவேண்டும்.

வெளிவிவகார அமைச்சராக இருந்தேன் என்கிற வகையில் இலங்கை மனித உரிமை மீறல்களை அனைத்துலக கண்காணிப்புக் குழு கண்காணிப்பதை எதிர்க்கிறேன். இலங்கையில் பழமையான நீதி அமைப்பு உள்ளது.

இருப்பினும் தற்போதைய அரசாங்கம் அதனை செயலிழக்கச் செய்து விட்டது. இந்தச் சூழ்நிலையில் ஐக்கிய நாடுகள் சபையின் கண்காணிப்பு தவிர்க்க இயலாது. இதற்காக அரசாங்கத்தைத் தான் குற்றம் சாட்ட வேண்டும்.

இலங்கை வரலாற்றில் அனைத்துலக சக்திகளுடன் நேச சக்திகளாக இருந்தோம் ஆனால் அரசாங்கத்தின் கொள்கைகளால் அதற்கு மாறான நிலை ஏற்பட்டுள்ளது.

அனைத்துலகம் தொடர்பில் அரசாங்கத்தின் பார்வை குறைபாடுடையதாக உள்ளது. பண்டாரநாயக்கர்கள் காலத்தில் அனைத்துலக விவகாரங்களில் பங்களிப்புச் செய்து வந்த இலங்கை இப்போது அதனை இழந்து விட்டது என்றார் மங்கள சமரவீர.

(ச-5)


காரைநகர் - புகலி

**சிவசுப்பிரமணிய ஆலய அலங்கார உற்சவம் -2007**

**9 ஆம் நாள் இரதோற்சவம்**



இற்றைக்கு 220 ஆண்டு கால பழமை வாய்ந்த மேற்படி ஆலயத்தில் நிகழும் சர்வசித்து வருடம் ஆனித்திங்கள் 15 ஆம் நாள் (29.06.2007) இன்று வெள்ளிக்கிழமை 9 ஆவது நாள் இரதோற்சவம் தொடர முருகன் திருவருள் கைகூடியுள்ளது.

மாலை 2.00 மணிக்கு கும்பபூசை

மாலை 4.30 மணிக்கு வசந்த மண்டபபூசை

மாலை 6.00 மணிக்கு முருகப்பெருமான் தேருக்கு எழுந்தருளுவார்.

30.06.2007 சனிக்கிழமை மாலை 6.00 மணிக்கு தீர்த்தோற்சவம்

உற்சவகுருக்கள்:-சிவஸ்ரீ தெ.சோமசுந்தரக் குருக்கள்

உற்சவ காலங்களில் அடியவர்கள் ஆசாரசீலர்களாக வருகை தந்து எம்பெருமான் திருவருளைப் பெற்றுய்ய வேண்டுகிறோம்.

சுபம்

ஆலய பரிபாலன சபையினர்

புகலி சிவசுப்பிரமணிய கோவில்,
காரைநகர்.

(C-177)


## கலை இலக்கிய விழா

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் மேற்கு பிரதேச கலாசாரப் பேரவை நடாத்தும் கலை இலக்கிய விழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு தொல்புரம் சிவபூமி முதியோர் இல்ல மண்டபத்தில் நடைபெறும்.

வலி மேற்கு பிரதேச செயலர் திருமதி தே.பாபு தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழக் வாழ்நாள் சிரேஷ்ட புவியியல் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை பிரதம விருந்தினராக கலந்து கொள்கிறார். சிறப்பு விருந்தினராக சங்கானை பிரதேச கல்விப் பணிப்பாளர் துரை எங்கரசு சிறப்பு விருந்தினராக கலந்து கொள்கிறார்.

(ச-49)

## பரிசளிப்பு விழா

ஊரெழு கணேசா வித்தியாசாலையின் பரிசளிப்பு விழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 12.45 மணிக்கு நடைபெறும். அதிபர் சி.திரிகரன் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் கோப்பாய்க் கோட்ட கல்விப் பணிப்பாளர் இ.சிவஞானசுந்தரம் பிரதம விருந்தினராக கலந்து கொள்கிறார்.

(ச-79)

## பயிற்சிக் கருத்தரங்கு

(காரைநகர்)

பட்டதாரி நிகழ்ச்சித்திட்ட உதவியாளர்களுக்கான வினைத்திறன் பரீட்சை யூலை மாதம் 07 ஆம் திகதி நடைபெறவிருப்பதால் அப் பரீட்சைக்குத் தோற்றவுள்ளோருக்கான இலவசப் பயிற்சிக் கருத்தரங்கு நாளையும் நாளை மறுதினமும் காலை 9 மணி தொடக்கம் 3 மணிவரையும் யாழ்.இந்து ஆரம்ப பாடசாலையில் நடைபெறவுள்ளது.

இக் கருத்தரங்கில் பாடத் திட்டங்களான மாகாண சபை தொடர்பான விடயங்கள், ஸ்தாபன கோவை நடைமுறைகள், நிதிப்பிரமாணங்கள் ஆகியனவும் எதிர்பார்க்கப்படும் வினாக்களுக்குரிய விடையளிக்கும் பயிற்சியும் வழங்கப்படவுள்ளது.

அனுபவமிக்க கணக்காளர்களும் பல்கலைக்கழக விரிவுரையாளர்களும் கலந்துகொள்ளவுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

(அ-246)


**தவறிவிட்டது**

மதவடி, கோப்பாய் மத்தியைச் சேர்ந்த மகாலிங்கம் கவிதரன் என்பவரது தேசிய அடையாள அட்டையும் (820091370V), விசேட அடையாள அட்டையும் 26.06.2007 அன்று திருநெல்வேலி சந்தையில் தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்காணும் முகவரியில் அல்லது தேனு களஞ்சியம், திருநெல்வேலி சந்தை என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும்.

(153)



பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை

185-வது ஆண்டு விழாவும் பரிசளிப்பு விழாவும் -30.06.2007




**பாடசாலைக் கீதம்**

கல்வி அன்னை மீது கவிகள் பாடுவோம்
கலைகள் பல கனிந்து சொரியும் காரணம் கலாசாலை
(கல்வி அன்னை)

பருத்தித்துறை பெயர்புனையும் பாங்குறும் நம் நகரில்
பண்புடன் ஒளிரும் அன்னை பாதை பேணும் தீபமாம்
(கல்வி அன்னை)

ஓங்கி நல்வளர் உயர்பனை மரமும்
ஒளிதனைப் பரப்பிடும் கலங்கரை விளக்கமும்
உயிர்கள் பல வாழும் கடல்தனையும் கொண்ட
எங்கள் பாடசாலை இன்பசின்னம் நினைந்து
(கல்வி அன்னை)

எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தழுவி
நுண்ணிய விஞ்ஞானமும் செந்தமிழ் சங்கீதமும்
மாண்புறு மனையியல் ஓவியம் சரித்திரம்
மகிழ்ச்சியூட்டும் உடற்பயிற்சி மற்றும் கலை தான் கொண்ட
(கல்வி அன்னை)

பல்சிறார்களும் பாங்குடன் கூடி
பண்ணரிய ஒற்றுமை பூண்டோரன்னை சேய்கள் போல்
பொற் சுடராம் நல்லறிவை போற்றி நாட்டில் சேவை செய்ய
பொற்பரனின் பாதம் ஏற்றி வாழ்க என்றும் வாழ்கவே
(கல்வி அன்னை)

185-வது ஆண்டு விழா நடைபெறும் இந் நன்னாளிலே பாடசாலையை பாராட்டி வாழ்த்துவதுடன் பாடசாலை மேன்மேலும் வளர்ச்சியடைந்து எதிர்காலச் சந்ததியினருக்குச் சிறந்த கல்விச் சேவைகளை வழங்க எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை,
பருத்தித்துறை.

-பாடசாலைச் சமூகம்


## பட்டப்பின் கல்வியியல் டிப்ளோமா பரீட்சைகள்

(யாழ்ப்பாணம்)

பட்டப்பின் கல்வியியல் டிப்ளோமா பகுதி நேரம்-பகுதி I மற்றும் முழுநேர கற்கை நெறி மாணவர்களின் முதலாம் அரையாண்டுப் பரீட்சைகள் எதிர்வரும் 2 ஆம் திகதி முதல் ஆரம்பமாகின்றன.

நேர சூசியை பீடாதிபதி அலுவலக விளம்பரப் பலகையில் பார்வையிடலாம். அனுமதி அட்டைகளை பீடாதிபதி அலுவலகத்தில் பெற்றுக் கொள்ள முடியுமென கலைப் பீடாதிபதி அறிவித்துள்ளார்.

(ச)

## ஜூலை 7 முதல் 13 வரை தொல்பொருள் ஆய்வியல் வாரம்

(கொழும்பு)

தேசிய தொல்பொருள் ஆய்வியல் வாரமாக ஜூலை 7 ஆந் திகதி முதல் 13 ஆம் திகதி வரையிலான காலப்பகுதியை அரசாங்கம் அறிவித்துள்ளது.

அந்தக் காலப் பகுதிக்குள் 'தேசிய மரபுரிமை பிள்ளைகளுக்கே' என்ற கருப்பொருளுடன் பாடசாலை மாணவர்களை ஒன்றிணைத்த வேலைத்திட்டத்தைத் தொடங்குவதற்கும் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

(ச-5)

## முன்பள்ளி விளையாட்டு

(பொன்னாலை)

அராலி மேற்கு மலரும் மலர்கள் முன்பள்ளி சிறார்களின் விளையாட்டு விழா நாளை பிற்பகல் ஒரு மணிக்கு அராலி மேற்கு சனசமூக நிலைய முன்றலில் நடைபெறும்.

சனசமூக நிலைய உப செயலாளர் செ.விஜிதன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் வட்டு.மத்திய கல்லூரி ஓய்வு பெற்ற அதிபர் சி.சிவஞானபோதன், வலி மேற்கு பிரதேச சபை செயலர் க.இராசதுரை ஆகியோர்பிரதம விருந்தினர்களாக கலந்து கொள்கின்றனர்.

(ச-49)

## செய்தி அறிக்கையிடல் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்.ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி நிலையத்தில் நடைபெறும் தொடர் கருத்தரங்குகளின் வரிசையில் யூலை மாதம் முதலாம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி முதல் 2 மணிவரை பாதுகாப்பு செய்தி அறிக்கையிடல் எனும் தலைப்பில் கருத்தரங்கு ஒன்று இடம் பெறவுள்ளது.

செய்தியாளர்கள் மேற்படி கருத்தரங்கில் கலந்து பயன்பெறும்படி ஊடக வளங்கள் பயிற்சி நிலைய இயக்குநர் அழைப்பு விடுத்துள்ளார்.

(ச)

## இராசிபலன்

29.06.2007

(ஆனி 15, வெள்ளிக்கிழமை)

சதுர்த்தசி முன்னிரவு 7.35 மணிவரை
கேட்டை பிற்பகல் 05.07 மணிவரை
இராகுகாலம் 10.26-11.56 மணிவரை
சுபநேரம் 05.56-07.26 மணிவரை

| | |
|---|---|
| மேடம்:- | அஜீரணக்கோளாறு, பொருள் விரயம், கலகம், காரிய தடங்கல் |
| இடபம்:- | மனோதைரியம், நல்ல வருமானம், நல்ல வரவேற்பு, முயற்சி கைகூடும். |
| மிதுனம்:- | பகைவர் விலகுவர், பணவருவாய், மன மகிழ்ச்சி, தொழில் நன்மை. |
| கடகம்:- | குழப்பமான நிலை, குடும்பக்கவலை, காரிய தாமதம், ஆரோக்கியக் குறைவு. |
| சிங்கம்:- | தன்னம்பிக்கைக்குறைவு, புதிய விடயம், அற்பர் உறவு, வேலைச்சுமை. |
| கன்னி:- | காரிய அனுகூலம், நற்கீர்த்தி, பணவருவாய், போசன நன்மை. |
| துலாம்:- | மனோசங்கடம், அதிக செலவு, கடின வேலை, முயற்சி தாமதம். |
| விருச்சிகம்:- | வெகுமானம், தெய்வதரிசனம், நண்பர்கள் சந்திப்பு, சயன சுகம். |
| தனுசு:- | தந்தைவழி உறவு, கோபப்படுதல், காரிய தாமதம், சுபசெலவு. |
| மகரம்:- | தெய்வதரிசனம், பொருள்சேர்க்கை, செய் தொழில் விருத்தி, குதூகலம். |
| கும்பம்:- | சுபநிகழ்வு, தொழில் ஆர்வம், நண்பர்கள் உதவி, மேன்மை. |
| மீனம்:- | அச்சமான நிலை, கட்டுப்பாடு, திடீர் பயணம், பணவிரயம். |

-வளவன்

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை கிழக்கு நல்லூர்

# அருள்மிகு ஸ்ரீ வீரமாகாளி அம்மன் கோயில்

# இரதோற்சவ சிறப்புமலர் - 29.06.2007

## மஹோற்சவ பிரதம குருவின் ஆசிச்செய்தி



அகில புவனமாதாவாகிய அன்னை வீரமாகாளி என்ற வீரத் திருமநாமத்துடன் அருள் ஆட்சி செய்ய வண்ணை நல்லூர் வாழ் மக்கள் எல்லோரும் மெய்நெறியோடு ஆலயம் வந்து மஹோற்சவ காலத்தில் அன்னையை வழிபட்டு தாம் தாம் விரும்பிய சித்திகளெல்லாம் பெற்ற வண்ணம் உள்ளனர். காளியம்மாவின் கடைக்கண் பார்வையையும் அருட்காட்சிகளையும் கண் குளிர கண்டுகளித்த அன்பர்கள் பலர் உள்ளனர்.

அப்படி திருவள் நிறைந்து விளங்கும் அன்னைக்கு இன்று தேர்த்திருவிழா.அன்னை தேரேறி வீதிவலம் வரும் வேளை அடியவர்களின் பழவினைகள் யாவும் வேரோடு நீங்கிவிடும் என்பதில் ஐயமில்லை. தேரேறி வரும் அன்னையைத் தரிசித்து எம் எல்லோரின் பழவினைகள் யாவும் நீங்கி மண்ணில் நல்லவண்ணம் வாழ தாயாரை உள் ளன் போடு பிரார்த்திக்கின்றேன்.

இந்த நாட்டில் வாழ்கின்ற அனைவரும் ஒற்றுமையாக அமைதியாக சுய மரியாதையுடன் வாழ எல்லாம் வல்ல அகில புவனமாதாவாகிய வீரமாகாளி அம்பாள் திருவருள் வேண்டி பிரார்த்தித்து நல்லாசிகள் கூறுகின் றேன்.

சுபம்

**சிவசிறி சி.செல்வராசக்குருக்கள்**
வண்.வீரமாகாளியம்மன்
தேவஸ்தான மஹோற்சவ பிரதமகுருவும்
ஆலயதர்மகர்த்தாவும்



## வாழி

சைவகுருப் பரம்பரையோர் நீடு வாழி
சக்தியவள் பக்தர்களும் தொண்டர் வாழி
துய்யதமிழ் மன்னன் சங்கிலியன் வாழி
தூயராஜ தானிநகர் நல்லூர் வாழி
தையலரின் கற்புநெறி ஞானம் வாழி
தரணி தனில் யாழ்ப்பாணப் பதியும் வாழி
வையகத்தில் ஆதிசைவ வம்சம் வாழி
வீரமா காளியம்மை வாழி ! வாழி!!

## ஆலய பிரதமகுருவின் ஆசியுரை



அண்டங்கள் அனைத்தையும் அரசாட்சி செய்கின்ற அன்னை வீரமாகாளி வண்ணை மாநகரில் நல்லையம்பதியில் கோயில் கொண்டு எழுந்தருளியிருந்து வேண்டு வார்க்கு வேண்டுவனவற்றை அருள்பாலிக்கின்ற கலியுக தேவியாம் காளி அம்பாள் இன்று தேரேறி வீதிவலம் வரும் வேளை அம்பாளின் கடைக்கண் பார்வை பட்டாலே போதும் அடியவர்களின் துன்பங்கள் எல்லாம் நீங்கிவிடும் என்பதில் ஐயமில்லை.

தேரேறிவரும் அன்னையை தரிசித்து அம்பாளின் அடியவர்களின் முன்வினைகள் நீங்கி இம்மண்ணில் இன்புற்று வாழ அன்னை வீரமாகாளியை உள்ளன் போடு பிரார்த்திக்கிறேன்.தேரேறும் அகில புவனமாதாவே தேரில் வீதிவலம் வரும் வேளை உன் கடைக் கண் பார்வையால் தங்களின் ஆலயத்தை சிருஷ்டிக்க வேண் டுகிறேன்.

எதிர்வரும் ஆண்டு தாயார் தேரேறும் வேளை இவ்வாலய திருப்பணி வேலைகள் முற்றுப்பெற எல்லாம் வல்ல வீரமாகாளி அம்பாளை பிரார்த்திக்கின்றேன்.

இவ்வுலகத்தில் வாழ்கின்ற அனைவரும் ஒற்றுமையாக வாழவும் நாட்டில் சாந்தியும் சமாதானமும் நிலவவும் எல்லாம் வல்ல வீரமாகாளி அம்பாளை பிரார்த்தித்து அருளாசி கூறுகின்றேன்.

சுபம்

**சிவாச்சாரிய இளவரசு**
**சிவசிறி சிவ கமல்ராஜ்குருக்கள்**
**[பிரதமகுருவும் தர்மகர்த்தாவும்]**

**அம்பாள் மரக்காலை**
**Ambal Timber Depot**
NO:261 Pointpedro Road, 261,பருத்தித்துறை வீதி,
Nallur Reg.No:NAL/58 நல்லூர்.

**வெங்கடேஸ்வரா**
உலகப் பிரசித்திபெற்ற இங்கிலாந்து தொழில்நுட்பத்துடன் தயாரிக்கப்பட்ட 12 வருட உத்தரவாதம் கொண்ட RALEIGH சைக்கிள் யாழ். ஏகநியோகஸ்தர்கள் ஆண், பெண் இரு பாலாருக்கும் உண்டு
துவிச்சக்கர வண்டிகள் அவற்றுக்கான உதிரிப்பாகங்கள்
அனைத்தையும் பெற்றிட நாடுங்கள்
இல: 125A, 127 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

**யோகி கோம்சயன்ஸ் அக்கடமி**
**YOGI HOMESCIENCE ACADEMY**
**அழகுக் கலை பயிற்சியகம்**
75,அம்மன் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

சைக்கிள், சைக்கிள் உதிரிப்பாகங்கள் மற்றும் கண்ணைக்கவரும் சிறுவர்களுக்கான சைக்கிள்கள் அனைத்தையும் உங்கள் எண்ணம்போல் தெரிவு செய்ய நாடவேண்டிய இடம்
**ஈஸ்வரன் ரேடர்ஸ்**
T.P 021 2813
69,கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

**சந்நதி முருகன் வேக் ஏசாப் அன் சேவிஸ்**
டேவிட் பீரிஸ் மோட்டார் கொம்பனி லிமிட்டெட்டின் "அதிகாரம் பெற்ற சேவை முகவர்",
மோட்டார் சைக்கிள் ஸ்பெயார் பாட்ஸ்,
ரான்ஸ்போட் அன் ரவல்ஸ்
T.P 021 2228076
0777110199
021 2225202
241,பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

**கிருஷ்ணா நகை மாளிகை**
இல 09, கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P 021 222 5046
09,Kannathiddy Road,
Jaffna.



# நயினை நாகபூஷணி அம்மன் தேர்ச் சிறப்புமலர் - 2007




அனைவருக்கும் அம்பாளின் அருள் கிடைக்க பிரார்த்திக்கின்றோம்



உறுதியும் உத்தரவாதமும் உள்ள
22 கரட் தங்க, வைர நகைகளைப்
பெற்றுக்கொள்ள நம்பிக்கையான ஸ்தாபனம்

**வி.எம்.கே. ஜுவல்லர்ஸ்**

இல.105, மின்சாரநிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
கிளை கண்டிவீதி, சாவகச்சேரி.



தேர் பவனி வரும் நயினை அன்னையே! நின் அருள் அனைவருக்கும் கிடைக்கட்டும்



சகலவிதமான கேக், ஐஸ்கிறீம் குளிர்பானங்களைத் தயாரிப்பதற்கான பொருட்கள், கைத்தொழில் மூலப் பொருட்கள், வாசனைத் திரவியங்கள் மற்றும் ஆயுர்வேத மருந்துச் சரக்குகள், அறோவ்ட்மா ஆகிய அனைத்தையும் பெற்றிட

**ஸ்ரீகாந் எசன்ஸ் அன் குறோசறீஸ்**

இல -161, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
T.P 021-222 2219



நயினை நாகபூஷணித்தாயே நலிவுற்றிருக்கும் எமக்கு நல்லருள் தருவாயம்மா



கொழும்பிலிருந்து பொருட்களை வட பகுதிக்கும்
அங்கிருந்து விவசாய உற்பத்திப் பொருட்களை
மிகவும் குறைந்த கட்டணத்தில் கொழும்பிற்கும்
பரிமாற்றம் செய்யும் கோழி மற்றும்
விலங்கினங்களின் தரம்வாய்ந்த உணவுகளின்
வடமாகாண ஏக விநியோகஸ்தர்கள்

**பிரகாஷ் போக்குவரத்து சேவை**

இல-221, டாம் வீதி, கொழும்பு-12
T.P 0112 2543310
0112 2543309

இல-455, 457 கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்
Fax:- 222-2958 T.P 222-2145



அகிலத்து நாயகியே எம் அல்லல் தீர்த்திட உன்னருள் நாடி நிற்கின்றோம் அன்னையே!



குறித்த தவணையில் ஓடர் நகைகளை
தரமான 22 கரட் தங்க நகைகளில் செய்து தர
யாழ். நகரில் நம்பிக்கையான நகைமாடம்

**மைதிலி நகை மாடம்**

இல-89V, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

**யாழ்.மைதிலி ஜுவல்லர்ஸ்**

157, Sea Street
Colombo - 11
Tel :- 0112 396239



இன்று தேர் உலா வரும் நயினை அம்பாளின் அருள் எல்லோருக்கும் கிடைக்க வேண்டுகின்றோம்



புத்தம் புதிய துவிச்சக்கரவண்டிகள், T.V,
டெக் வகைகள், றேடியோவகைகள்,
அவற்றிற்கான உதரிப்பாகங்கள், அன்ரனா
வகைகள் போன்றவற்றை மொத்தமாகவும்
சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள

**இ.ச.பேரம்பலம் சக நிறுவனம்**

இல-50,52,54, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P:- 222 2988, 3096
Fax:- 222 2368



எல்லாம் வல்ல நயினை அம்பாளின் அருள் கிடைக்கப் பிரார்த்திக்கின்றோம்



**சிறி நதியா நகை மாளிகை**

இல-01, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

கிளை சானுயா சிறி ரூபா நகை மாளிகை

இல-56, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.



அவனியிலே சமாதானம் நிலைத்திட அருள் வேண்டி நிற்கின்றோம்

அனைத்து வகைப் புடவைகளையும்
மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ள கைராசியான ஸ்தாபனம்

**சீமாட்டி புடவைக்கடல்**




கிளை மங்கை சில்க்ஸ் மொடேர்ன் மார்க்கற்

சர்வதேச கடன்
அட்டைகள்
ஏற்கப்படும்

இல-15, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.
இல-122, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.
T.P:- 222 2196 Fax:- 222 2102





அகிலத்தின் நாயகியே உன் அருள் நாடி நிற்கின்றோம்

அழகிய தங்க நகைகளின் தரத்தினை
தாரக மந்திரமாகக் கொண்ட நிறுவனம்

**நிருத்திகா ஜுவல்லர்ஸ்**



இல-177, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.



அலைகடல் நடுவினில் ஆரோகணித்திருப்பவளே அவலங்கள் நீக்கி அருள்பொழிந்திடம்மா



மலிவான தரமான பட்டுப் புடவைகளுக்கு
நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்

**த.சங்கரப்பிள்ளையும் மைந்தர்களும்**

21, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.



நயினையில் வீற்றிருக்கும் நாயகியே நின் அருளை ஈர்ந்திடம்மா

**அசோகா நகை அகம்**

**ASOKA JEWELLERS**



Manufacturers of Gold Jewels

இல-111, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P:- 222 6290

No. 111, Kasthuriar Road,
Jaffna.

# நயினை நாகபூஷணி அம்மன் தேர்ச் சிறப்புமலர் - 2007


அனைவருக்கும் ஸ்ரீ நயினை நாகபூஷணி அம்பாளின் அருட் கடாட்சம் கிடைக்கப் பிரார்த்திக்கின்றோம்



பாலர் வகுப்பு முதல் பட்டதாரி வகுப்பு வரையிலான சகல பாடப் புத்தகங்களும் மற்றும் அப்பியாசப் புத்தகங்கள், பாடசாலை உபகரணங்களும் மலிவான விலையில் ஒரே இடத்தில் பெற்றுக் கொள்ள நகரின் மத்தியில் நாடவேண்டிய நல்லதோர் நூலகம்.

**பூபாலசிங்கம் புத்தகசாலை**

- தென்னிந்திய சஞ்சிகைகள், வாழ்த்துமடல்கள், காலத்திற்கேற்ற கலண்டர்கள், டயறிகள் யாவற்றினதும் உறைவிடமும் இதுவே!
- யாழ்ப்பாணம் -கொழும்பு பத்திரிகைகள் அனைத்தினதும் பிரதான முகவர்கள்.

இல-04, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

ஸ்ரீ நயினை நாகபூஷணி அம்பாளின் அருள் கிடைக்கப் பிரார்த்திக்கின்றோம்

நவீன வடிவமைப்புக்களில் அழகிய தங்க நகைகளை பெற்றுக் கொள்ள நாடவேண்டிய இடம்



**பிறேம் நகை மாடம்**

**பிறேம் பிளாஷா**

யாழ்.வீதி, மானிப்பாய் T.P: 0777 060327

ஐந்து தலை அரவின் கீழ் அமர்ந்தருளும் அம்பிகையே நயினையுறை நாகம்மாளே!



**கிருஷ்ணா நகை மாளிகை**

கிருஷ்ணா அடைவு கடை



இல: 09, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.

T.P: 222 5046

370, கே.கே.எஸ். வீதி யாழ்ப்பாணம்.

நாட்டின் சாந்தியும் சமாதானமும் நிலைத்திட அம்பாளின் அருள் வேண்டி நிற்கின்றோம்!

மோட்டார் சைக்கிள்களையும் உதிரிப்பாகங்களையும் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஒரே இடம்



**சுரனி மோட்டோர்ஸ் அன் ஹாட்வெயர்ஸ்**

இல:164 ஸ்ரான்லிவீதி, யாழ்ப்பாணம். T.P: 222 2850

நாகபூஷணி அம்பாளின் திருவருள் யாவர்க்கும் கிடைக்கப் பிரார்த்திக்கின்றோம்.

**எரிக் கணேஷ்**



- இலவசமாக கண்களைப் பரிசோதித்து நவீன ரகக் கண்ணாடிகளைப் பெற்றுக்கொள்ளவும்
- இழந்த பற்களுக்கு நிகராக சங்குப் பற்களைக் கட்டிக் கொள்ளவும்
- உறுதிமிக்க பற்கிளிப்புக்களை பொருத்திக் கொள்ளவும்
- வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட நவீன முறையிலான கேஸ்வகைகளைப் பெற்றுகொள்ளவும்
- விரும்பிய நிறங்களில் பிளாஸ்ரிக் லென்ஸ், போட்டோ கிறேலென்ஸ் என்பவற்றை பெற்றுக்கொள்ளவும் நாடுங்கள் (கட்டுப்பற்களை சுத்தம் செய்யும் மாத்திரை விற்பனைக்குண்டு)

மூக்குக் கண்ணாடியகமும் பல் கட்டுமிடமும்

564. 566 ஆஸ்பத்திரி வீதி. யாழ்ப்பாணம்.

கிளை இல:- 80 கே.கே.எஸ்.வீதி. சுன்னாகம்.

அவனி எங்கும் அமைதி நிலைத்திட அம்பிகையின் அருள் வேண்டி நிற்கின்றோம்



ஆங்கில மருந்து வகைகள், ஊட்டச்சத்து பால்மா வகைகள் என்பவற்றை நியாய விலையில் பெற்றுக் கொள்ள

**R.V.G மெடிக்கல்ஸ்**

இல:-504, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

**ஆர். வி.ஜி.பீடி ஸ்தாபனம்**

இல:58 நல்லூர், குறுக்கு வீதி, யாழ்ப்பாணம். T.P: 222 2129

இன்று தேரேறிவரும் அம்பாளின் அருள் அனைவருக்கும் கிடைக்கப் பிரார்த்திக்கின்றோம்

நவநாகரிகமான சுபமுகூர்த்தப் பட்டுப்புடவைகளுக்கும் உங்கள் சகல விதமான ஆடைத் தெரிவுகளுக்கும் நாடும் நல்லதோர் ஸ்தாபனம்



**ராசி சில்க்ஸ்**

70,71 A, நவீனசந்தை (உட்புறம்) யாழ்ப்பாணம்.

T.P: 222 5571

**நல்லி சில்க்ஸ்**

121 /1, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் நயினையம்பாளின் அருள்வேண்டி நிற்கின்றோம்



சகல விதமான பலசரக்குப் பொருட்களையும் நியாயமான விலையில் பெற்றுக்கொள்ள

**றூபா பன்முக வர்த்தகம்**

இல:104 A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். T.P: 2479

அனைவருக்கும் ஸ்ரீ நயினை நாகபூஷணி அம்பாளின் அருள் கிடைக்கப் பிரார்த்திக்கின்றோம்

பலசரக்குப் பொருட்கள், மிக்ஷர் தயாரிப்பிற்கான பொருட்கள் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஸ்தாபனம்



**ஜெகன் களஞ்சியம்**

இல:285, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

T.P: 222 5035

# நயினை நாகபூஷணி அம்மன் தேர்ச் சிறப்புமலர் - 2007

## ஏகாந்தமாய் இருப்பவளே என்குறை தீர்த்திடுவாய்

கடல் நடுவே வீற்றிருக்கும் நாகபுரி அன்னையே
கவலைகளைத் தீர்த்திடுவாய் நயினைபதி அன்னையே
கள்ளமில்லா உள்ளத்திலே வாழும் என் அன்னையே
கவலை இல்லா வாழ்வு தரும் நயினை புரி அன்னையே

ஏழுதீவின் நாயகியே எங்கள் குல தேவியே
ஏழையினை காத்திடவே தேரேறி வருபவளே
ஏனிந்த மௌனமம்மா ஏழைக்கு உதவிடவே
ஏகாந்த மாய் இருப்பவளே என்குறை தீர்த்திடுவாய்

கார்த்திபன் சிவராஜா, ஆனைப்பந்தி

## சித்தரத் தேரில் அம்பாள் வருகின்றாள்

நயினையுறை நாகம்மாளே! சித்திரங்கள் அமைந்த
தேரிலே வாருமம்மா!
நிலவு புகழ்வளர் நயினா தீவிலமர் தாயே! நின்பெருமை
யாரறிவார்! அழகமைந்த தேரிலே ஓடிவாருமம்மா!
நொந்து மனம் வாடுகின்றேன்! நொடிப் பொழுதில்
கையேந்திக் காப்பதற்கு தேரிலே ஓடி வாருமம்மா!
நாப்பழுக்க உனது திருநாமம் தன்னை நாள் தவறாது
ஓதுகின்றேன்! நாற்றிசையும் சுற்றி அம்பிகையே
தேரில் வாருமம்மா!

சின்கந்தையா, காரைநகர்

## பஞ்சவர்ண ரதமேறி பாவியர்க்கு அமைதி தா

மதமிங்கே மதம் பிடித்து மக்களை மாக்களாக்க
நிதமுன்னைத் தொழுதுந்தன் பதமே தஞ்சமென்று
உதவம்மா தாயே என்று உளறுவோர் மனங்குளிர
ரதமேறி வருந்தாயே பதமாக்கு இவர் நெஞ்சை

ஐந்துதலை நாகமது அரியணையாய்த் தான் சுமக்க
பஞ்சணையில்இருப்பது போல்பாம்பணையில்இருப்பவளே
வஞ்சகரால் வதைபடும் உன்னடியவரின் குறைதீர்க்க
பஞ்சவர்ண ரதத்தில்வந்து பாவியர்க்கு அமைதி தா

அமைதி தா அன்னையென்று அனுதினமும் நாம்தொழுது
சுமைமிகுந்த நெஞ்சினராய்த் துடிக்கின்றோம் தெரியலையோ
உமை மகளின் வடிவே எம் உத்தமியே தேரில் வந்து
அமைதியினைத் தாருமம்மா அருள் நாக பூஷணியே

கவிமணி அன்னைதாஸன்

## துயரத்தைக் கீழே இறக்குமம்மா

வீரத்தின் அன்பின் கருணையின் தலைவியாய்
விளங்கும் நயினை அம்பாளே
யாழ் குடாநாட்டுல் தவிக்கும் மக்கள் மீது
கருணை காட்டு
அபிராமியே உன்னுடைய அழகைக் காண
கோடான கோடி மக்கள் திரண்டாலும்
எங்களுடையதுன்பத்தைநீக்கயாரும்முன்னில்லை
அம்பாளே நீ தேரேறும் வேளையிலே
எங்களது துயரத்தை கீழே இறக்குமம்மா
நாட்டில் அமைதியும் சமாதானமும் வேண்டி
அருள் தாயே

ஜெ.மேனகா. பருத்தித்துறை

## தேரேறி வாருமம்மா தேவியே ஆதிபராசக்தி நாகபூஷணியே!

கருணையின் வடிவமே கடலாளும் நாயகியே நாகபூஷணி
கலங்கி கண்ணீர் சிந்தி நாதியற்றவராக் நல்வாழ்வு
வாராதோ
நம்துயர் தீராதோ நமக்கிங்கு நல்லதீர்வு வாராதோ!
நாளும் நாம் அவதிப்படல்தான் எம் நிலையோ!
நாகபூஷணியே!
நற்றமிழர் நாமென தாயே உன் கழலடி நாடினோம்
கடைவிழிநீர் துடைத்துஎமைக்காக்க தேரேறி வாருமம்மா
ஆதி பராசக்தியே நாகபூசணியே!

ஆத்திசூடியூர், வி.மகாலிங்கம்

## சமாதானம் தா தா

நயினா தீவு நாகபூஷணி நம் தாயேவா அருள்தர வாவா
நல்லவளே வல்லவளே நாடாளும் தெய்வமே வாவா
வெயில் ஒளிபோல் ஒளிரும் வேலவனின் வெற்றித்
தாயே வாவா
வறுமைபிணி தீரவேவீதிவலம்வருதேரில் அன்னையேவா
குயில்பாடவே மயில்ஆடவே கடல்அலைநடனம்ஆடவே
காற்று அசைய சோலைப்பூ உதிரவே கதிர் ஒளியாய்
காட்சிதரு தாயே வா
துயில் கொள்ளும் திருமாலின் தங்கை நீயே வா
சமாதானம் தாதா
தீராத இனப்பிரச்சினையை தீர்க்கும் தாயேவா காருத்
தருள வாவா

என்.தமிழ்மகன் (குருக்கள் பீ.ஏ)

## தேரேறித் தமிழரிடர் தீர்க்கவரம் அருள்வாய் !

பொங்கியெழும் அலைமீது தங்கியருள் தாயே
பூரணியே புங்கவியே உன்னருளை வேண்டி
தங்குதடை பலதாண்டித் தமிழரெலாங் கூடி
தண்ணருளைப் பெற்றிடவே நயினையினை நாடி
சங்கினொடு முத்துவிளை சாகரத்தைத் தாண்டி
தஞ்சமென வந்தடைந்தார் தமிழினத்தைக் காக்க
தெங்கினொடு வேம்புவன்னிச் சோலைவளர் தாயே
தேரேறித் தமிழரிடர் தீர்க்கவரம் அருள்வாய்!

கவிஞர் நயினை இராகுலன்

## நம்பி வந்தோரை கண்போல் காப்பவளே

அலைகடல் ஓரத்தில் சிலைவடிவாய் அமர்ந்து
அருளாட்சி புரிபவளே நாகராஜேஸ்வரி
நம்பி வந்தோரை கண்போல் காப்பவளே
காக்கும்சக்தியும் நீயே நாகராஜேஸ்வரி
நெய்விளக்கேற்றி வந்தோம்
பூமாலை கோர்த்திடுவோம்
கவலைகள் போக்கிடுவாய் நாகராஜேஸ்வரி
தேரேறி வரும்போது உன் மாதுளம் முகம் பார்த்தேன்
என் முகம் மலர்ந்ததும் உன்னருளாளே
அலைகடல் தாண்டிவந்து உன்பாதம் தொழும்போது
தீராத நோயும் தீர்ந்தது தாயே

ம.புவனா, கன்னாதிட்டி

## இந்திரன் அமைத்தது சக்திபீடம்

(7ஆம் பக்கத் தொடர்ச்சி...)

இந்தியாவில் பஞ்சபூதங்கட்கு ஐந்து புகழ் பூத் ததலங்கள் காணப்படுகின்றன. ஈழத்தில் இவை ஐந்தையும் ஒரே முகமாகிதுரிசிக்கக்கூடிய தலமாக நாகம்மாள்திருக் கோயில் விளங்கா நிற்றல் காண்க அவையாவன,

*நிலம் :-* மணிப்பீடம் அமைந்த நயினையும் (மூர்த்தி தலம் தீர்த்தமும்)

*நீர்:-* கருணையை வெளிக்காட்டும் ஏழ் கடல்

*தீ:-* நயினைத் தழத்தில் எங்கிருந்து நோக்கினும் அக்கினி வடிவனான சூரிய உதயம் மிகப்பெரிய உருவாக தரிசிக்கலாம்.

*காற்று:-* கருணையை உள்வாங்கிய ஏழ்கடலலைகளது ஞானக்கதிர் வீச்சின் எல்லை காற்றாகி எங்கும் கலந்து உயிர்க்கு உயிராகி நிற்றல் தலம் சென்று காண்க.

*ஆகாயம்:-* அகில அண்டமும் விரிந்தும் பரந்தும் செறிந்தும் முடிவிலா முடிவாய் மூவர்க்கும் முதற்பொருளாய் முத்தொழிற்கும் வித்தாகி தேவர்க்கும், நாகர்க்கும், சித்தர்க்கும், ஞானியர்க்கும், யாவர்க்கும் தாயாகி நிற்கும் தன்மை ஏழ்கடல் வெள்ளத்தில் ஏகவெளியில் அகத்திலும் புறத்திலும் காண்பார் காண்பார்.

இப் பஞ்ச பூத வடிவமே மனித உடல் பஞ்சபூத தோற்றத்தில் பஞ்சப்புலன். வடிவம் மூலக்கருவே ஐந்து தலை நாகம். நயினையில் மூலமூர்த்தி (ஆன்மா) சிவையாகிய லிங்கம் சிந்தாமணி நவரெத்ன பீடமே நமது மூலாதாரம் நமது மூலதாரத்திலிருந்து எழும் ஓசையே நாத ரூபிணியாகிய நாகபூஷணி என்பது ஞானியர் அறிவர். ஓசை ஒலி எல்லாம் ஆனாய் நீயே என்பர் அப்பர்.

### நயினையில் பஞ்சபூதங்களின் அருட்பாடும் வெளிப்பாடும்

வைகாசிப் பூரணையை அண்டிய காலங்களில் எழும் சோழக்காற்று அடியார் செல்லும் கடற்கலங்களை உலுப்புதலும் ஆனிப் பூரணையில் அங்கு அவ்வாறு செல்வோர் நிசப்தமாக கடலலையில் நடந்து செல்வது போற்காணும் மாட்சி சொலற்கரியது. அன்னையின் அருள் விழாக் காலங்களில் பொங்கிடும் ஏழ்கடல் மலை வெள்ளம் எங்கு செல்கின்றன? புயற்காற்று எங்கு செல்கின்றன? தீர்த்த உற்சவ காலங்களில் சூரிய பகவான் வருணனைக் கொண்டு குடைகவித்தல் எங்கும் தண்ணிழல், எங்கும் அருள்மழை, எங்கெங்கு பார்த்தாலும் பேரற்புதம், அமுத சுரபியில் அன்னமழை, கற்பகசோலையில் அமிர்த நன்னீர் (தாக சாந்தி) அருள் தரு நிழலில் (வேம்பு) அடியவர் அருள்துயில் இவை புவனேஸ்வரி பீடத்தில் காணும் என்றும் மாறாத பேரற்புதங்கள்.

கிரேத ,திரேத, துவாரக யுகத்தில் புவனேஸ்வரியாக கலியுகத்தில் நாகேஸ்வரி, நாகராஜேஸ்வரி, நாகபரமேஸ்வரி, சிவ நாகேஸ்வரி, ஸ்ரீநாகபூஷணியாக அடியார் திருக்குறிப்பால் சுட்டப் பெறுதல் காணலாம்.

பெற்றதால் அன்னை பெறுமுயிரனைத்தும் பேணலாலன்னை
பெற்றிடுவோர்களுற்றதாலன்னை விரும்பிய வனைத்து முதவ
லாலன்னை
எக்கலையுஞ் சொற்றதாலன்னை உலகொடுவானுந் தொழுத
லாலன்னை
என்றென்றும் பற்ற தாங்க கருணைபொழிதலாலன்னை பராபரை
நாகபூஷணியாள்

நம் மண்ணில் குன்றா சாந்தி நிலைபெற அடியார்கள் உடல், உள, பிணி நீங்கிட உடற்கும் உயிர்க்கும் உறுதி தரும் அவள் திருக்கடை நோக்கம் நம்மீது செறிந்திட அகிலமதில் நோயின்மை, கல்வி, தனம், தான்யம், அழகு, புகழ், பெருமை இளமை, அறிவு, சந்தானம், வலி, துணிவு, வாழ்நாள் வெற்றி ஆகும் நல்ஊழ், நுகர்ச்சி ஆகிய பதினாறு பேறும் கிடைத் திட அவள் திருமுன் சென்று ஆராக் காதலில் பணி வோமாக.
ஓம் சாந்தி.

இசைமாணி
ஸ்ரீ நாகபூஷணி நவரெத்தினம்

## அலை கடலின் நாயகியே

அலை கடலின் நாயகியே
அம்மா ஆயிரம் கண்ணுடையாள்
கொடி யேறி விழாக்காண
அம்மா கேட்கும்வரம் தந்திடுவாள்

தேரேறி திருவீதி வருமுன்னே
தீர்வொன்று எமக்கு தந்திடம்மா
கையேந்தும் உன் அடியவர்க்கு
கவலையற்ற வாழ்வொன்று தந்திடம்மா

ஆர்.மதி சண்டிலிப்பாய் வடக்கு

## அழகமைந்த தேரினிலே !

உலகிற்கோர் அன்னையென ஒளிர்கின்ற தேவி
உனையடைய வருமடியார்க் குற்றதுணையாகி
நிலவுபுகழ் வளர்நயினா தீவிலமர் தாயே
நின்பெருமை யாரறிவார் நிமலனவன் வாமம்
குலவியமர்ந் தருளுதவிச் சமரசமுங் காணக்
கொண்டவளே நாகம்மை எண்டிசையும் போற்ற
அலகிலருட் சீர்பெருகும் சித்திரங்கள் மிக்க
அழகமைந்த தேரினிலே அருளீய வருவாய்

நயினைக் கவிமணி வே.செல்வநாயகம்

## அலங்காரத் தேரேறி வருகிறாள்

அலங்காரத் தேரேறி அன்னை வருகிறாள்
அவலங்கள் போக்கிடவே அன்னை வருகிறாள்
உலகாளும் நாகம்மை தேரில் வருகிறாள்
உள்ளங்கள் உவகையுற அன்னை வருகிறாள்
விலகாத வினையகற்ற அன்னை வருகிறாள்
விடியலினைத் தந்திடவே தேரில் வருகிறாள்
குலமோங்க நயினையிலே தேரில் வருகிறாள்
கும்பிட்டோர் குறையகற்ற அன்னை வருகிறாள்

மு.முத்துக்குமார்

## நயினையம்பதி அமர்ந்த நாகபூஷணியே அம்மா

உம்மை நாடி வந்த அடியார்க்கு
நல்வரம் கொடுத்தாயம்மா
நயினையம்பதி நாகபூஷணியே அம்மா
கடல் கடந்து வந்தோம் அம்மா
கருணையுடன் பக்தி கொண்டோம்
செல்வந்தநாயகியே செல்வம் எல்லாம்
தந்தருள்வாய் நயினையம்பதி
அமர்ந்த நாகபூஷணியே அம்மா
நாகம் குடைபிடிக்க பக்தர் எல்லாம்
புடைசூழ தேர்மீது வலம்வந்து
தேசத்திற்கு அருள்புரிவாய் ஓங்கார
நாயகியே நயினை நாகபூசணி அம்மா

செ.இளங்கோ. அரசடி நல்லூர்

## தேரேறி வருவாய்

என்புருகப் பாடுவார் கருத்தில் சூழ்பவளே
இருந்திதயம் பூணுவார் சிரத்தில் வாழ்பவளே
நின் பணியை செய்யுமவர் நினைவாய் நிற்பவளே
நீண்ட தவத்தார்க்கு அருள்பவளே
துன்பத்தில் உழன்று துயர்படும் அடியார்க்கும்
அன்பினைக் காட்டிக் காப்பவளே
அன்புவந்து நயினை நகர் மேவும்
தயாவதியே தேரேறிவருவாயே

சுபா.காசிநாதன் M.ED

## முத்தியில் இடம்பிடிப்போமோ

நயினைப்பதி வீதியிலே வண்ணவொளி வீசிநிற்க
நாகம்மாள் ஏறிவரும் தேர்
வேதவொளி மேவிநிற்க நாதவொலி காதினிக்க
அமைதியுடன் ஆடிவரும் தேர்
அசுரரைக் கருவறுத்து தேவர்களை மீட்டுத்தந்த
நாயகியார்! ஏறிவரும் தேர்
விண்ணவரும் மண்ணவரும் வெற்றியெனக்
கோசமிடும்

சக்தியவள் ஏறிவரும் தேர்
ஈரமான வீதியிலே நேர்த்திகளைச் செய்யவென
அடியவர்கள் உருளுகின்ற தேர்
தேரினை வடம்பிடித்து ஆர்வமுடனே இழுத்து
முத்தியில் இடம்பிடிப் போமோ

ச.சிவப்பிரகாசம் சீனிவாசகம் வீதி

நெருப்பை நீ மறைக்க முடியும்; புகையை என்ன செய்யப் போகிறாய்?

—அமெரிக்கா

வலம்புரி

## யப்பானின் அநாகரிகச்செயல்

இணைத் தலைமை நாடுகள் வெளியிடவிருந்த கூட்டறிக்கை யப்பானின் இடக்குப் போக்குக் காரணமாக வெளிவராமல் போய் விட்டது.

இலங்கை அரசைக் கண்டிக்கும் வகையில் இணைத் தலைமை நாடுகளின் கூட்டறிக்கை அமையவிருந்தமையால் அதனை வெளியிடுவதற்கு யப்பான் எதிர்ப்புக் காட்டியது.

இதனால் குறித்த இணைத் தலைமை நாடுகளின் கூட்டறிக்கை வெளிவராமல் போயிற்று. அதே நேரம் இடம்பெயர்ந்த மக்களுக்கு உதவுவதற்கென ஐந்நூறு கோடி யென் நாணயத்தை யப்பானிய அரசு இலங்கைக்கு வழங்கியுள்ளது.

இதனைவிட நிலக்கண்ணி வெடி அகற்றல், இடம் பெயர்ந்த மக்களை மீளக்குடியமர்த்தல் என்ற பெயரிலும் கோடிக்கணக்கான நிதியை யப்பான் வழங்குவதற்கு தயாராகவுள்ளது.

இலங்கைக்கான நிதியுதவியை இடைநிறுத்தி இனப்பிரச்சினைக்கு சமாதான வழியில் தீர்வைக் காண்பதற்கான அழுத்தங்களை உலக நாடுகள் இலங்கை அரசு மீது பிரயோகித்து வரும் வேளையில், யப்பான் நடந்து கொண்ட முறைமை எவ்வகையிலும் நியாயமற்றதும் அநாகரிகமானது மாகும்.

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு சமாதான வழியில் தீர்வுகாணும் விடயத்தில் யப்பான் வலிந்து மூக்கை நுழைத்துக் கொண்டது.

இலங்கைக்கு அதிகளவில் நிதியுதவி வழங்கும் நாடு என்ற பெயருடன் இலங்கை விவகாரத்தில் மூக்கை நுழைத்த யப்பான் தனது விசேட சமாதானத் தூதுவராக, யசூசி அகாஷியை அனுப்பியிருந்தது.

இதுவரை பதின்னான்கு தடவைகள் இலங்கைக்கு விஜயம் செய்த யசூசி அகாஷி நோர்வேயின் சமாதான முயற்சியை குழப்பும் வகையிலும் நடந்து கொண்டார்.

எனினும் அணுகுண்டு வீச்சில் பாதிக்கப்பட்ட யப்பான் மனித அழிவுகளின் அவலத்தை நன்குணர்ந்திருக்கும் என்றும் இன, மத பேதம் கடந்து அந் நாடு செயற்படும் என்றும் தமிழ் மக்கள் நம்பியிருந்தனர்.

ஆனால் யப்பானின் சமகால நடவடிக்கைகள் அதிர்ச்சி தருவதாக உள்ளது. அதாவது, இணைத் தலைமை நாடுகளின் கூட்டறிக்கை வெளிவராமல் தடுத்தமை, நிதி உதவி வழங்கியமை ஆகிய நடவடிக்கைகள் யப்பான் மீது அவநம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது.

யப்பானின் விசேட தூதுவர் அகாசி விடுதலைப் புலிகளை பல தடவைகள் சந்தித்தவர். அவரின் சமாதான முயற்சியை அவர்கள் வரவேற்றிருந்தனர்.

இவ்விதம் வரவேற்றமைக்கு யப்பான் நடுநிலையோடு செயற்படும் என்ற எதிர்பார்ப்பே காரணமாகும். எனினும் தமிழ் மக்களின் நம்பிக்கையை உடைத்தெறியும் வகையில் யப்பான் நடந்து கொண்டது மட்டுமன்றி புத்த மதத்தைக் கடைப்பிடிக்கும் அந்நாடு மதம் சார்ந்து செயற்படுகிறது என கருதவேண்டியும் உள்ளது.

இலங்கை மண்ணில் தமிழ் மக்கள் படும் அவலங்களை நேரில் அவதானித்த பின்னர்-தமிழ்க் கூட்டமைப்புத் தலைவர்கள் சந்தித்து நிலைமையை எடுத்துக் கூறிய பின்னர்- யப்பானின் விசேட தூதுவர் அகாசி நடந்து கொண்ட முறை இலங்கைத் தமிழர்களை வேதனைக்கும், ஏமாற்றத்திற்கும் ஆளாக்கியுள்ளது.

# கந்தவனமுறையும் கந்தனே சரணம்

## இன்று கந்தவனக்கடவை முருகன் தேர்த்திருவிழா

கலியுக வரதனாகிய கந்தப் பெருமான் தம்மை வழிபடும் அடியார்களின் துன்பந் துடைத்தொழிக்க எழுந்தருளியிருக்கும் தலம் தான் பொலிகண்டி கந்தவனக்கடவை.

முத்தமிழால் வைதாரையும் வாழ வைக்கும் முருகன் கடல் அலை தாலாட்ட கவின்மிகு காட்சிதர இன்று தேரேறி வருகின்றான். முருகன் என்றாலே அழகன் என்று பொருள். அழகெல்லாம் சேர்ந்து ஒருருவெடுத்தாற் போன்று சண்முகப் பெருமானாக ஸ்ரீவள்ளி தேவ சேனாதிபதியுடன் தேர்மீது அமர்ந்து வருங் காட்சி கண்கொள்ளாக் காட்சி. வாழ்த்த வாயும், நினைக்க மட நெஞ்சும், தாழ்த்தச் சென்னி யும் தந்தது எதற்காக? கந்தக் கடவுளை வழிபடுவதற்காக!

இன்று கந்தவனம் விழாக்கோலம் பூண்டு பக்திமயமாகக் காட்சியளிக்கும் திருநாளாகும்.

"முருகா! முருகா!" என்று பக்தர் குழாம் பாட்டிசைக்க, மங்கள வாத்தியம் முன்னே முழங்கிவர, அடியார்களாகிய பக்தி வெள்ளத்தின் நடுவே தங்கத்தோணி அசைந்தாடி வருவது போல முருகப் பெருமான் தேரானது அழகு ரதமாகப் பவனி வரக் காணக் கண்கோடி வேண்டும்.

திரும்பிய பக்கமெல்லாம் "முருகனே முத்துக் குமரனே சரணம்" என்று கூறிய வண்ணம் அடியவர் கூட்டம் அழுது தொழுது வரும்போது மெய் சிலிர்க்கும். உண்மைக் களிப்பால் ஆனந்தக் கூத்தாடும். தீயவரை ஒழித்து தேவர் சிறை மீட்ட செல்வன் எங்களது துயரம் தீர்க்க இன்று தேரேறி வருகின்றான்.

அல்லல் அறுத்தொழிக்கும் ஆறுமுகனாகக் காட்சி தரும் கந்தவனக் கடவை முருகனைக் கைதொழுவோம் வாரீர்!

"பஞ்சம் படை வந்தாலும் பாரெல்லாம் வெந்தாலும்
அஞ்சுவமோ நாங்களடி கிளியே ஆறுமுகன் தஞ்சமடி"

என்று யோகர் சுவாமிகள் கூற்றுப் படி நாங்களும் முருகனையே தஞ்சம் என்று முற்றாக நம்பி ஒப்படைத்தால்

### கந்தனே குகனே வாராய் கவலைகள் தீர்த்திடுவாய்

கந்தவனக் கடவைக் கந்தனே காத்தருள்வாய் முருகா
பந்தவினையறுத்தே பரமபதம் அருள்வாய் ஐயா
உந்தனைச் சரண் புகுந்தோம் ஓடி நீ வந்திடுவாய்
கந்தனே குகனே வாராய் கவலைகள் தீர்த்திடுவாய்

முருகனே முத்துக் குமரனே சரணம் சரணம்
கந்தவனமுறையும் கந்தக் கடவுளே சரணம் சரணம்
திருமாலின் மருகனே தீந்தமிழ்ச் செல்வமே வா வா
ஒரு முறை வந்தெமக்குத் திருமுகம் காட்டாயோ?
பெருமானே புள்ளிமயில் வாகனனே
தருவாய் சிவகதி நீ முருகா
போரெமக்கு வேண்டாம் அமைதியைத் தந்திடுவாய்
ஒருநாளுமுனை மறவோம் ஓங்காரத்துட்பொருளே
வருவாய் எம்முன்னே வளமாய் நாம் வாழ்ந்திடவே!

அவன் நிச்சயம் அருள்புரிவான். ஆகவே முருகன் குமரன் குகனென்று உருக்கும்படி செய்யும் கந்தவன முருகனைக் கைதொழுது நமது வளமான அமைதி வாழ்வுக்கு அடிகோலுவோமாக.

சைவப் புலவர் இராசையா ஸ்ரீதரன்
நாச்சிமார் கோயிலடி.

# இந்திரன் அமைத்தது சக்திபீடம் அது இருப்பதோ நயினையில் முக்திகூடம்

மறிகடல்கள் ஏழையும், திகிரி இரு நான்கையும், மாதிரக் கரி எட்டையும், மானாக மானதையும் மாகூர்மமானதையும் ஓர் பொறி அரவுதாங்கி வருபுவனங்கள் ஈரேழையும், பூமகளையும், திகிரி மாயவனையும், அரையிற் புலி ஆடையுடையானையும் முறை முறைகளால் ஈன்றவள் புவனேஸ்வரி.

எண்பத்து நான்கு நூறு ஆயிரம் யோனி பேதங்களால் உருவாகும் உயிர் வர்க்கங்களையும், அகில அண்ட சராசரங்களையும் கடந்து அவள் பரங் கருணை வெள்ளம் வான் கடந்து, ஊன்கடந்து, உயிர்கலந்து, உளங்கலந்து பேராட்சி தரும் உலகப்பதி நயினை -தேவபோனது துயரகல உலக மாதா புவனேஸ்வரி திருவுளங்கொண்டு மணித்துவீபத்தில் நவரத்தின மணிப்பீடத்தில் எண்ணாயிரம் கோடி தேவர்கள், முப்பத்து முக்கோடி தேவ அதிபதிகள், கணாதிபதிகள், சப்த ரிஷிகள், அட்டவசுக்கள் மற்றும் ஆயிரம் பணாமுடி ஆதி சேடன் உட்பட நாகாதிபதிகள் போற்றிட திருமால், சிவன், இந்திராணி, இலக்குமி, சரஸ்வதி புடைசூழ ஆனிப் பூரணையில் அருளாட்சியில் அமர்ந்தனள் (இத்தினமே அம்பாளது தீர்த்த உற்சவம்)

இவற்றை முன்னிறுத்தியே பண்டையில் இருந்து இற்றைவரை புவனேஸ்வரி உற்சவங்கள் வரையறுக்கப்பட்டு மரபு தவறாமல் நடத்தப்பட்டு வருகின்றன. இங்கு அன்னையை முதலில் அர்ச்சிக்கும் பேறு கடல் வண்ணன் திருமாலுக்கும் கிரேதயுக அந்தத்தில் ஆயிரம் பணாமுடியுடைய ஆதிசேடனுக்கும் கிடைத்தது.

கிரேதா யுகத்தில் தேவ வழிபாடு இவ்வாறிருக்க சாட்சி தருபவனாக ஆதிசேடன் மூலக் கரு வறையில் ஊழி ஊழிதோறும் அழியா உடலுடன் ஐந்து தலை நாகமாக நாகம்மாளது [illegible]சனாக காட்சிதருதல் அடியவர் பெற்ற பேறு எனலாம்.

### மூலக் கருவறையில் காணும் மூலங்கள் மூன்று

ஐந்து தலை நாகம் மணிப்பீடம் அன்னை- ஏக சிவையாகி நிற்கும் லிங்கம் கலியுகத்தில் நான் காண்பவை இவை. இவ் யுகத்திற்கு உயிர் வர்க்கங்களது வேண்டுதலை ஏற்றுக் கொள்ளவும், பேரருள் ஆனந்த வெள்ளமாகப் பொழிந்தவாறு தீர்த்தம் கடலாக நீண்டிருக்கும் மாட்சி இருந்தவாறு.

### தேவகோன் சமைத்த ஒப்பற்ற மணிப்பீடம்

தேவகோனது ஆட்சியும் தேவர்களதும் குபேரனதும் ஆட்சி கிரேத, திரேதயுகத்தை கலந்தவாறு, நாகராசர்களது ஆட்சியும் துவார யுகம் வரை நீடித்திருந்தது. புவனேஸ்வரி பீடம் அமைந்த நவரெத்தின சிம்மாசனத்தை கைப்பற்ற மகாதரநாகனும், அவன் உறவினர் குலாதர நாகனும் போரிட்டமை மகாவம்சம் மூலம் பெறப்படுவதாகும்.

இப்போரை முடிபிற்கு கொண்டுவர கௌதம புத்தர் வான் வழிவந்து இங்கு தங்கியவேளை இந்துவாகிய அவருக்கு அம்பிகையின் பீடத்தை அடைந்ததும் நிர்வாண ஞானம் கிடைத்தது. அன்னையின் பேரொளியை வைகாசிப் பூரணைமுதல் ஆனிப் பூரணை வரை பெற்று சித்தார்த்தர் பெரும் பேறடைந்தார். இவர் ஞான நிலை கண்ட நாகர் இவர் பாலன்புற்று மணிப்பீடத்திலிருந்து கல்யாணி (களனி) வரை நீண்டிருந்த நாகராட்சியில் இங்கிருந்த நவரெத்தின சிந்தாமணி ஆசனம் களனிக்கு எடுத்துச் செல்லப்பட்டதாக ஆய்வறிஞர் கருது கின்றனர்.

### பஞ்சபூத காரணி புவனேஸ்வரி

புவனங்கள் பதினான்கையும் பூத்தும், காத்தும் கறைக் கண்டனுக்கு மூத்தவளாகவும், மூவாமுகுந்தற்கு இளையளாகவும் போற்றப்படும் அன்னையின் இத்தலத்தில் பஞ்ச பூதங்களைத் தரிசிக்கும் பேறு இங்குவரும் ஒவ்வோர் அடியார்க்கும் இயற்கைப் பேறாக கிடைத்தல் காணலாம்.

(6ஆம் பக்கம் பார்க்க...)

# வெள்ளி நற்சிந்தனை 24

## நாலும் இரண்டும் சொல்லுக்கு உறுதி

இயற்கையின் தோற்றங்கள் மனிதனுடைய இயல்புகளை உணருவதற்குத் துணை செய்யும். குறிப்பாக மனிதனை மரங்களோடு இணைத்துப் பார்க்கும் மரபு உண்டு. மரங்களின் தோற்றத்தையும் வளர்ச்சி நிலைகளையும் மிக உன்னிப்பாகக் கவனித்து நமது முன்னோர் சில கருத்துகளை முன்வைத்துள்ளார். இன்று விஞ்ஞான நோக்கில் மரங்களைப் பற்றிய கற்கை நெறியொன்று உளது. அது தாவரவியல் எனச் சிறப்புப் பெயரால் அழைக்கப்படுகிறது.

ஆனால் நமது முன்னோர்கள் தாம் நேரில் கண்ட மரத்தின் வளர்ச்சியை மக்களின் குணவியல்போடு ஒப்பிட்டு நோக்கியுள்ளனர். அதனை குறுகிய பாடலிலே விளக்கியுள்ளனர். சில மரங்கள் பூக்காமலே காய்க்கும் இயல்புடையவை. சில மரங்களின் விதைகளைத் தூவி விதைத்தாலும் அவை முளைப்பதில்லை. இதே போல மனிதர்களையும் வகைப்படுத்தலாம்.

பூக்காமல் காய்க்கின்ற மரங்கள் இருப்பதைப்போல மனிதர்களிடையும் குறிப்பு அறிந்து செயலாற்றக் கூடியவர்களும் இருக்கிறார்கள். நன்றாகப் பண்படுத்திய நிலத்திலே விதைத்தாலும் முளைக்காத விதையைப் போல எடுத்துச் சொன்னாலும் உணர இயலாத மூடர்களும் உலகில் இருக்கின்றனர்.

இந்த ஒப்பீடு முன்னோர் அநுபவத்தால் உணரப்பட்டது. மரங்களின் இயல்பை மனிதர் கவனிப்பதில்லை. ஆனால் இயற்கை எமக்கு சில செய்திகளைத் தருகிறது என்பதை நாம் உணரவேண்டும். மனிதன் தன்னைச் சூழவுள்ள இயற்கையை மறந்துவிடக்கூடாது. மக்கள் கூடிவாழும் போது ஒருவரையொருவர் புரிந்துகொண்டு இணைந்து வாழ வேண்டும்.

கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்

மக்களின் மனவியல்பை விளக்க நாம் நாளாந்தம் காணும் மரங்களை எடுத்துக்காட்டும் மரபு முன்னோரால் பேணப்பட்டு வந்துள்ளது. குறிப்பறிந்து வாழும் இயல்பால் அமைதி கிடைக்கும். மூடர்களையும் அறிந்து அதற்கேற்ப பண்பட்ட மனத்தோடு அமைதியாக இருப்பதற்குப் பயில வேண்டும்.

இது இன்றைய காலத்திற்கு இன்றியமையாதது. முரண்பாடுகள் மலிந்த மனித மனங்களிடையே சம நிலை காணவேண்டுமாயின் மனிதரைப் பகுத்து அறிந்து கொண்டு நடக்க வேண்டும். அதற்கு வழிகாட்டும் இப் பாடலை மனங்கொள்வது வாழ்வில் அமைதியைத்தரும்.

"பூவாதே காய்க்கும் மரமும் உள மக்கள் உளும்
ஏவாதே நின்று உணர்வார் தாம் உளரே -தூவா
விரைத்தாலும் நன்று ஆகா வித்தெனவே பேதைக்கு
உரைத்தாலும் தோன்றாது உணர்வு"

(நல்வழி:35)

# அரசாங்கத்துடன் இணைவதற்கு 20 ஐ.தே.க. எம்.பிக்கள் விருப்பம்

அரசாங்கத்தில் இணைய ஐக்கிய தேசியக் கட்சியின் 20 நாடாளுமன்ற உறுப்பினர்கள் விருப்பம் தெரிவித்துள்ளனர் என்று அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்துமேலும் 20 நாடாளுமன்ற உறுப்பினர்கள் அரசாங்கத்துடன்இணைய விருப்பம் தெரிவித்துள்ளனர். இதன் முதற்கட்டமாக தென்மாகாணத்தைச் சேர்ந்த ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரும் ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த இளைய தலைமுறை உறுப்பினர் ஒருவரும் வெகுவிரைவில் அரசுடன் இணையவுள்ளனர்.

இதற்கான பேச்சுக்கள் இப்போது நடைபெறுகின்றன. அமைச்சர் பதவியைக் கொடுத்தாவது அவர்களை அரசாங்கத்துடன் இணைத்துக் கொள்வோம். அதன்மூலம் அரசாங்கத்தைப் பலப்படுத்துவோம் என அமைச்சர் மேலும் தெரிவித்தார். (ச-5)

# கொழும்பு ஊடகவியலாளர் மீது விமானப் படையினர் தாக்குதல்

(கொழும்பு)

விமானப் படையினரால் ஊடகவியலாளர் கே.பி.மோகன் நேற்று பிற்பகல் மிகக் கடுமையாகத் தாக்கப்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக சென்றிருந்தபோது அவரை வீதியில் வைத்து வழிமறித்து விமானப் படையினரும் ஜனாதிபதியின் பாதுகாப்புப் பிரிவினரும் இணைந்து தாக்கியுள்ளனர்.

பாதுகாப்புத் தடைகளை தாண்டிச் செல்ல முற்பட்டதால் அவர் தாக்கப்பட்டார் என்று விமானப் படையினர் தெரிவித்துள்ளனர். கடுமையான தாக்குதலுக்குள்ளான கே.பி. மோகன் கோட்டைப் பொலிஸ் நிலையத்தில் விமானப் படையினரால் கையளிக்கப்பட்டார்.

இதனைத் தொடர்ந்து ஊடக நிறுவனங்கள் தலையிட்டு காயமடைந்த நிலையில் காணப்பட்ட மோகனை கொழும்பு மருத்துவமனையில் அனுமதித்துள்ளனர். (ச-5)

# தமிழ்நாடு மண்டபம் அகதி முகாமைச் சூழ சுற்றுச்சுவர் அமைக்க நடவடிக்கை

அகதிகள் தப்பிச் செல்வதைத் தடுப்பதற்கு மண்டபம் முகாமைச் சூழ சுற்றுச்சுவர் அமைக்கப்படவுள்ளதாக அகதிகள் மறுவாழ்வுத்துறை ஆணையாளர் கற்பூரசுந்தரபாண்டியன் தெரிவித்தார்.

இலங்கை அகதிகள் தங்க வைக்கப்பட்டுள்ள மண்டபம் முகாமில் அகதிகளின் குறைகளைக் கேட்டறிந்தஅவர், செய்தியாளர்களிடம் பேசும்போதே இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் கூறியதாவது,

இராமநாதபுரம் கலக்டர் பரிந்துரையின் பேரில் தமிழக அரசிடம் 6 கோடி 46 இலட்சம் ரூபாநிதி கேட்டுள்ளோம். இந்த நிதியின் மூலம் மண்டபம் அகதிகள் முகாம் சீரமைக்கப்படவுள்ளது.

அத்தியாவசியப் பணிகளான வீதி, மின்சாரம், கழிப்பறை, சுற்றுச்சுவர் என சீரமைப்புப்பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன. மண்டபம் முகாமைச் சுற்றி சுற்றுச்சுவர் இல்லாததால் அகதிகள் தப்பிச் செல்கின்றனர். இதனைத் தடுக்க முகாமைச் சுற்றி சுவர் அமைக்கப்படும். அகதிகள் குடியிருப்புக்களுக்குத் தனி மின் மீற்றர் வசதி ஏற்படுத்தப்படவுள்ளது.

அகதிகளுக்கு மாலை 6 மணி முதல் காலை 6 மணிவரை மட்டுமே இல்வசமாக மின்சாரம் வழங்கப்பட்டு வந்தது. இனி 24 மணிநேரமும் இலவச மின்சாரம் வழங்கவுள்ளோம்.

அகதிகளை மண்டபம் முகாம் அழைத்து வர தனியாக வான் வாங்குவது குறித்து ஆலோசனை செய்து வருகின்றோம். (ச)

# வெள்ளை வான்களின் நிறங்களை மாற்றுவதற்கு அரசு தீர்மானம்-ரணில்

(கொழும்பு)

வெள்ளை வான்களின் நிறங்களை மாற்றுவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது என்று எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஊடகவியலாளர்களை நோக்கி நகைச்சுவையாகத் தெரிவித்தார்.

கொழும்பு கேம்றிச் டெரஸிலுள்ள எதிர்க் கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்றுக் காலை முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீர தலைமையிலான குழுவினரைச் சந்திப்பதற்கு முன்னதாக ஊடகவியலாளர்களிடம் பேசுகையிலேயே அவர்இவ்வாறு கூறினார்.

அரசியலில் என்ன மாற்றம்? என்று ஊடகவியலாளர்களைப் பார்த்துக் கேட்ட எதிர்க் கட்சித் தலைவர், வெள்ளைவான்களின் நிறங்களை மாற்றுவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளதாம் எனவும் சிரித்துக் கொண்டு நகைச்சுவையாகக் கூறினார்.

இதனையடுத்து பேச்சுவார்த்தை நடைபெற்ற இடத்தை விட்டு ஊடகவியலாளர்கள் வெளியேறும்வேளை ஏதாவது வைத்துவிட்டாச் செல்கின்றீர்கள் என்றும் அவர் வினாவினார்.

எதிர்க்கட்சித் தலைவரின் நகைச்சுவையான பேச்சைக்கேட்டு ஊடகவியலாளர்கள் வாய்விட்டுச் சிரித்தனர். (ச)

# பயிற்சி விமானம் விபத்தில் சேதம்

(கொழும்பு)

இரத்மலானைப் பகுதியில் விமானப் படைக்குச் சொந்தமான பயிற்சி விமானம் ஒன்று விபத்துக்குள்ளாகி சேதமடைந்துள்ளது.

நேற்று முன்தினம் பிற்பகல் 2.15 மணியளவில் பயிற்சியில் ஈடுபட்ட விமானத்தில் ஏற்பட்ட இயந்திரக் கோளாறு காரணமாக அவசர அவசரமாக இரத்மலானை விமான நிலையத்தில் தரையிறக்கப்பட்ட போது பயிற்சி விமானம் விபத்துக்குள்ளாகியுள்ளதாக விமானப் படையினர் அறிவித்துள்ளனர்.

விபத்தில் சிக்கிச் சேதமடைந்த விமானத்தை சீர்செய்து விட முடியும் என கப்டன் அஜந்த டி சில்வா தெரிவித்துள்ளார். இவ் விபத்தையடுத்து நேற்று முன்தினம் மாலை வரை விமானங்கள்,எதுவும் பறப்பில் ஈடுபடவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது. (ச-5)

# பூசகரைத் தடுத்து வைத்துள்ளமைக்கு எதிராக அடிப்படை மனித உரிமை மீறல் மனுத் தாக்கல்

(கொழும்பு)

வேலணையில் கைது செய்யப்பட்ட பூசகரையும் ஆலய பரிபாலனசபைத் தலைவரையும் கைது செய்து தடுத்து வைத்துள்ளமையை ஆட்சேபித்து இரண்டு அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் கொழும்பு உயர் நீதிமன்றத்தில் நேற்றுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி உட்பட ஏழு பேர் பிரதிவாதிகளாக மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளனர். வேலணை முத்துமாரி அம்மன் ஆலய கோபுர புனருத்தாரணப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது அங்கிருந்து சந்தேகத்திற்கிடமான பொதிஒன்றை கடற்படையினர் கண்டெடுத்ததாக அம் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இப்பொதி கண்டுபிடிக்கப்பட்டபோது வேறு ஆலயம் ஒன்றில் பூசகர் இருந்தபோதிலும் அவரை பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துக் கைது செய்தமை சட்டவிரோதமானது என அடிப்படையுரிமை மீறல் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது. அடிப்படை மனித உரிமை மீறப்பட்டமைக்காக ஐந்து லட்சம் ரூபா வீதம் இழப்பீடு பெற்றுத் தருமாறும் உயர் நீதிமன்றத்திடம் கோரியுள்ளனர். (ச)

# பூவரசங்குளத்தில் சடலம் மீட்பு

(வவுனியா)

வவுனியா கணேசபுரத்தில் நேற்றுக் காலை இளைஞர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். சூட்டுக் காயங்களுடன் மீட்கப்பட்ட சடலம் வவுனியா பூவரசங்குளத்தைச் சேர்ந்தவர்என அடையாளம்காணப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் இரவு பூவரசங்குளத்திலுள்ள உறவினர் வீடு ஒன்றிற்குச் சென்றபோதே இவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது.

சம்பவ இடத்திற்குச் சென்ற வவுனியா மாவட்ட நீதிவான் இளஞ்செழியன், மரண விசாரணைகளை நடாத்திவிட்டுச் சடலத்தை வவுனியா மருத்துவமனைக்குக் கொண்டு செல்லுமாறு உத்தரவிட்டார். (ச-5)

# இலங்கை இளைஞனுக்கு 10 வருடச் சிறைத் தண்டனை

ஹெரோயின் கடத்திய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட இலங்கை இளைஞன் ஒருவருக்குச் சென்னை உயர் நீதிமன்றம் 10 ஆண்டு சிறைத் தண்டனை விதித்துள்ளது. கடந்த வருடம் டிசம்பர் மாதம் 15 ஆம் திகதி சென்னை விமான நிலையத்தில் வைத்துக் கைது செய்யப்பட்ட இலங்கையைச் சேர்ந்த உவைஸ் (வயது-34) என்பவருக்கே இந்தச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. (ச)

## இணைத்தலைமை நாடுகளின்...

எதிர்பார்க்கின்றோம்.

அமைதி முயற்சிகளை ஊக்கப்படுத்தவும் எமது நாட்டின் அபிவிருத்திப் பணிகளை முன்னெடுப்பதற்கும் இம் மாநாட்டின் முடிவுகள் அமையும்எனக் கருதுகின்றோம்.

கடந்த வருடம் ஒக்டோபர் மாதம் ஒஸ்லோவில் நடைபெற்ற சமாதானப் பேச்சுவார்த்தைகள் முறிவடைந்து வன்முறைகளைத் தடுக்கும் நடவடிக்கைகள் தோல்வியடைந்ததால் 35 வருடங்களில் 60 ஆயிரம் உயிர்களைப் பலிகொண்ட இனப்பிரச்சினையை முடிவுக்குக் கொண்டுவர முடியவில்லை என்றார்.

உதவி வழங்கும் நாடுகள் சில மக்களின் மனித உரிமைகளைக் காரணம் காட்டி நிதியுதவியைக் குறைப்பதற்கு முற்படுகின்றன. ஆனால் யப்பான் தொடர்ந்தும் நிதியுதவிகளைச் செய்து வருவதாக போகொல்லாகம பாராட்டுத் தெரிவித்தார். (ச)

## நாவாந்துறை...

தாக்குதலையடுத்து அப்பகுதி சுற்றிவளைக்கப்பட்டு பாரிய தேடுதல் மேற்கொள்ளப்பட்டது.

இதேவேளை யாழ்.நகரம் உட்பட நாவாந்துறையை அண்மித்த பகுதிகளில் பொதுமக்கள் பலர் இராணுவத்தினரால் தாக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ச-5)

## புதிய...

அலெஸ் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இந்தச் சந்திப்பில் தனது கட்சியின் கொள்கை விளக்கவுரையை ரணிலிடம் மங்கள சமரவீர கையளித்தார். இனப்பிரச்சினை, நாட்டை அபிவிருத்தி செய்வது, புதிய அரசாங்கத்தின் தேவை, அதற்கான வழிமுறைகள் குறித்து ஆராயப்பட்டதாக சிறிபதி சூரியாராட்சி குறிப்பிட்டார். (ச-5)

## நடைபாதை...

தெருவில் வசித்து வரும் சங்கரப்பிள்ளை சிவகாந்தன் (வயது-29) என்ற நடைபாதை வியாபாரியே சுட்டுக் கொல்லப்பட்டவர் என அடையாளம் காணப்பட்டுள்ளது.

சடலம் யாழ்.போதனா வைத்தியசாலையில் பொலிஸாரினால் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (ச-5)

## வலந்தலைக்...

லுங்கியும் காணப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

சம்பவ இடத்திற்குச் சென்று விசாரணைகளை மேற்கொண்ட யாழ்.மாவட்ட பதில் நீதிவான் [illegible] திருநாவுக்கரசு, சடலத்தை அடையாளம் காணும் பொருட்டு யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்குமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார். (அ)

## புரிந்துணர்வு ஒப்பந்தத்தை...

நோர்வேயின் மத்தியஸ்தத்துடன் 2002 ஆம் ஆண்டு இலங்கை அரசும் விடுதலைப் புலிகளும் செய்து கொண்ட யுத்தநிறுத்த உடன்படிக்கையை நடைமுறைப்படுத்துவதே நாட்டின் முன்னேற்றத்திற்கான வழி என அமெரிக்கா வலியுறுத்தியுள்ளது.

இராணுவ நடவடிக்கை மூலம் தீர்வு எட்ட முடியாது என தாம் நம்புவதாகவும் அதிகாரப் பரவலாக்கல் மூலமே தீர்வு ஏற்படும். எனவே இலங்கை அரசும் விடுதலைப்புலிகளும் பேச்சுவார்த்தை மேசைக்குத் திரும்ப வேண்டும் என தாம் வலியுறுத்துவதாக அமெரிக்காவின் தெற்கு மற்றும் மத்தியாசியாவிற்கான உதவி இராஜாங்கச் செயலர் றிச்சட் பௌச்சர் தெரிவித்துள்ளார்.

கடந்த 25 ஆம் 26 ஆம் திகதிகளில் நோர்வேயின் தலைநகர் ஒஸ்லோவில் நடைபெற்ற இலங்கைக்கு உதவி வழங்கும் இணைத் தலைமை நாடுகளின் கூட்டத்திற்குச்சென்றிருந்த றிச்சட் பௌச்சர், நோர்வேயின் டக்ஸவிஷன் பத்திரிகைக்கு அளித்த நேர்காணலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

மேலும் கருத்துத் தெரிவித்த அவர், இலங்கையில் அரசியல் தீர்வு ஒன்று ஏற்பட இரு தரப்பும் யுத்த நிறுத்த உடன்படிக்கையைக் கடைப்பிடித்துப் பேச்சுவார்த்தைக்குத் திரும்ப வேண்டும் என அமெரிக்க உயர் மட்ட ஆலோசனைக் குழு உட்பட சர்வதேசமும் வலியுறுத்தியுள்ளது.

யுத்தம் நாட்டில் பேரழிவையே ஏற்படுத்தும். இலங்கை அரசுக்குப் பொருளாதார ரீதியில் முன்னேற்றம்தேவைப்படுகின்றது. அதனை விடுதலைப்புலிகளுடன் யுத்தத்தைப் புரிந்து கொண்டு அபிவிருத்தி நடவடிக்கைகளை முன்னேற்ற முடியாது.

விடுதலைப்புலிகள் மக்களின் உரிமைகளை மீறி வன்முறைகளில் ஈடுபட்டு வருகின்றனர் என இலங்கை அரசு கூறுவதை ஏற்றுக் கொள்ள முடியாது எனத் தெரிவித்துள்ள அமெரிக்க உதவி இராஜாங்கச் செயலர், தற்போது இருதரப்பும் ஈடுபட்டுள்ள யுத்தம் தற்காலிக வெற்றிகளை மாத்திரமே தரும் எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

நோர்வே, விடுதலைப்புலிகளைப் பயங்கரவாதப் பட்டியலில் இணைக்கவில்லை. ஆனால் அமெரிக்கா இணைத்துள்ளதே என நோர்வே பத்திரிகையாளர் கேட்டபோது பதிலளித்த றிச்சட் பௌச்சர்,

விடுதலைப்புலிகளைப் பயங்கரவாதப் பட்டியலில் இணைப்பது ஒரு முக்கிய விடயமல்ல. இலங்கையில் ஓர் நிரந்தர அரசியல் தீர்வொன்றைக் காண்பதே தற்போதுள்ள விடயமாகும் எனக் குறிப்பிட்டுள்ளார். (ச-5)

## மாவிலாற்றில்...

கருவி என்பவற்றினைப் படையினர் மீட்டனர். இச் சம்பவத்தில் படையினருக்கு எவ்வித சேதங்களும் ஏற்படவில்லை என ஊடக மத்திய மையம் மேலும் தெரிவித்துள்ளது. (ச-5)

## சி.டி.எம்.ஏ...

முன்னுரிமை வழங்கப்படும்.

❖ தொலைபேசித் தொடர்பைப் பெற்றுக் கொள்வதற்குரிய விண்ணப்பங்கள் யாழ்ப்பாணம் தொலைத் தொடர்புப் பிராந்திய காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

❖ தனிப்பட்ட விண்ணப்பதாரிகள் தாம் தற்போது வதியும் பிரிவு கிராம சேவையாளருடைய வதிவிடச் சான்றிதழ் மற்றும் தேசிய அடையாள அட்டையின் நிழற்படப் பிரதி இரண்டும் இணைக்கப்படல் வேண்டும். வியாபாரத் தேவைக்காயின் வியாபாரப் பதிவுச் சான்றிதழ் பிரதியும் இணைத்து யாழ்ப்பாணம் தொலைத் தொடர்புப் பிராந்தியக் காரியாலயத்தில் நேரடியாக ஒப்படைக்கப்பட வேண்டும்.

இக் கலந்துரையாடலில் வட மாகாணப் பிரதிப் பொது முகாமையாளர் வி.யோகேந்திரன், பிரதிப் பொது முகாமையாளர் என். சரவணபவன் ஆகியோர் கலந்து கொண்டனர். (ச)

## கடந்த...

காணாமல் போதல்கள் மற்றும் படுகொலைகள் என்பன அனைத்துலகத்தில் பெரிய பிரச்சினையாக உருவானது. இதனால் நாட்டுக்கு கெட்டபெயர் ஏற்பட்டது.

செப்ரெம்பர் 2006 முதல் பெப்ரவரி 2007 வரையிலான காலத்தில் 430 பேர் படுகொலை செய்யப்பட்டனர். 2 ஆயிரத்து 20 பேர் கடத்தப்பட்டனர் அல்லது காணாமல் போயுள்ளனர். இவர்களில் ஆயிரத்து 134 பேர் உயிருடன் இருப்பதாகத் தெரியவந்துள்ளது.

மற்றவர்கள் நிலை குறித்து எதுவித தகவலும் இல்லை. ஸ்கொட்லாந்து யார்ட் பொலிஸாரே வந்தாலும் இப்பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாத வகையில் சிக்கலாகவுள்ளது. (ச-5)

[illegible] அன்.கோ.[illegible] தாபனத்தாரால் இல.03, இரண்டாம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 29.06.2007 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.